# விசா ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைகளுக்காக விண்ணப்பிக்கும் இலங்கை நாட்டினருக்கான கடவுச்சீட்டு வழங்கல் ”சனடோரியா 2020”

சனடோரியா 2020 கீழ் இத்தாலியில் விசா நிலையை முறைப்படுத்த விண்ணப்பிக்க விரும்பும் இலங்கையர்களிடமிருந்து கடவுச்சீட்டுக்கான விண்ணப்பங்களை ஏற்றுகொள்வது தொடர்பில் இத்தாலியின் ரோம் நகரில் உள்ள இலங்கை தூதரகமானது வெளியுறவு அமைச்சகம் மற்றும் கொழும்பு குடிவரவு குடியகழ்வு திணைக்களம் என்பவற்றுடன் கலந்தாலோசித்து ஒரு விசேட நடைமுறையை வகுத்துள்ளது.

இவ் விசேட நடைமுறையின் கீழ், விண்ணப்பதாரர்கள் கடவுச்சீட்டு விண்ணப்பத்தின் தேவைக்காக துாதரகத்தில் **முன் பதிவு நேர ஒதுக்கீட்டை** (Prior Appointment) இங்கு கீழ் உள்ள இணையவழி தொடர்பின் மூலம் பெற வேண்டுமென்பதுடன் நேர ஒதுக்கீட்டு உறுதிப்படுத்தலுடன் கடவுச்சீட்டுக்கான சகல அசல் மூல ஆவணங்கள் சகிதம் கொடுக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்தில் கடவுச்சீட்டு விண்ணப்பத்தை ஒப்படைப்பதற்காக துாதரகத்துக்கு சமுகமளித்தல் வேண்டும்.

**முன் பதிவு நேர ஒதுக்கீட்டை பெறுவதற்கான இணையவழி தொடர்பு** (Prior Appointment) Link: https://smartscheduling.com/slembrome

விசேட நடைமுறையின் கீழ் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும், முழுமையான விண்ணப்பத்தை சமர்ப்பித்த திகதியிலிருந்து 10 நாட்களில் (அண்ணளவாக) கடவுச்சீட்டு வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. இவ் இலக்கை அடைய கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தல் குறித்து துாதரக வலைதளத்தில் சொல்லப்பட்ட வழிமுறைகளை பின்பற்றுமாறு அனைத்து விண்ணப்பதாரர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றர்கள். மேலும் தேவையான ஆவணங்கள் சகிதம் நிகராக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை திறமையாகவும் வேகமாகவும், செயன்முறைக்கு உட்படுத்த முடியுமென்பதை அறியத்தருகின்றோம்.

அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் சரியான நேரத்தில், கடவுச்சீட்டு வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்காக 30.06.2020ம் திகதிக்கு முன்னதாக துதாரகத்துடன் முன்பதிவு நேர ஒதுக்கீட்டை மேற்கொள்ள வேண்டும். துாதரகத்திற்கு கிடைக்கப்பெற்ற கடவுச்சீட்டினை தொடர்புடைய விண்ணப்பதாரர் உடன் பெற்றுக் கொள்ள கொழும்பில் இருந்து கடவுச்சீட்டு துாதரகத்துக்கு கிடைக்கப் பெற்றதும் அப்பட்டியல் உடனடியாக துாதரகம் வலைதளத்தில் வெளியிடப்படும்.

கூரியர் வழியாக தங்கள் கடவுச்சீட்டினை பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் அதற்கான படிவத்தினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்-படுவதுடன், யூரோ 12.00 ஐ கூரியர் கட்டணமாக செலுத்த வேண்டும்.

பின்வரும் பிராந்தியங்களில் வசிக்கும் விண்ணப்பதாரர்கள் ரோம் நகரின் இலங்கை தூதரகத்தை அனுகி சேவையை பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பிற பிராந்தியங்களை சேர்ந்தவர்கள் சேவைகளுக்காக மிலான் நகரின் இலங்கை (கொன்சுலேட்) துணைத்தூதரகத்திற்குச் செல்ல வேண்டும்

1). Abruzzo/ அப்ருஸ்ஸோ 2). Basilicata/ பசிலிக்காடா 3). Calabria/ கலாப்ரியா 4). Campania/ காம்பானியா 5). Emilia Romagna / எமிலியாரோமக்னா 6). Lazio / லாசியோ 7). Molise / மோலிஸ் 8). Marches/ மார்சஸ் 9). Puglia / பக்லியா 10). Sardegna/ சர்தேக்னா 11). Sicilia / சிசிலியா 12). Toscana / டோஸ்கானா 13). Umbria / உம்ப்ரியா

## கடவுச்சீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதில் பின்பற்ற வேண்டிய நடைமுறை

பின்வரும் வகைக்குட்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் பொருத்தமான விண்ணப்ப படிவங்களை தரவிறக்கம் செய்யவும் தேவையான அறிவுரைகள் மற்றும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் பற்றி அறிய தூதரக வலைத்தளத்தை பா்வையிடவும். உபய வழிமுறைகளின் படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவங்கள் அசல் மூல ஆவணங்கள் சகிதம் கலந்தாய்வுக்காக தூதரக கன்சயுலா் பிரிவில் (Consular Counter) ஒப்படைத்தல் வேண்டும்.

**தூதரக வலைதள விபரம்- [https://www.srilankaembassyrome.org/](https://www.srilankaembassyrome.org/)**

தூதரக வலைதள குறிப்பின் படி விண்ணப்பதாரர்கள் கடவுச்சீட்டுக்காக நிகரான புகைப்படங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

**வகை 01 : காலாவதியான இலங்கை கடவுச்சீட்டினை வைத்திருக்கும் விண்ணப்பதாரர்கள்**

- 4 புகைப்படங்களுடன் முறையாக நிரப்பப்பட்ட K -35A விண்ணப்பபடிவம்
- முன்னய அசல் கடவுச்சீட்டு (கட்டாயம்)
- அசல் பிறப்பு சான்றிதழ் (கட்டாயம்)
- அசல் தேசிய அடையாள அட்டை அல்லது ஓட்டுநர் உரிமம்
- காலாவதியான இத்தாலியில் தங்கியிருப்பதற்கான அனுமதி (இருப்பின்)
- கூரியர் படிவம் (தேவைப்பட்டால்)

**குறிப்பு**: விண்ணப்பம் மற்றும் பிற ஆவணங்கள் யாவும் இரண்டு தொகுதிகளில் சமர்ப்பிக்க வேண்டும் (TWO SETS)

வசூலிக்கப்படும் கட்டணம்: யூரோ 140.00
கூரியர் கட்டணம் யூரோ 12.00 (தேவைப்பட்டால்)

**வகை 02: இலங்கை கடவுச்சீட்டு நகலை மட்டுமே வைத்திருக்கும் விண்ணப்பதாரர்கள்**

- 4 புகைப்படங்களுடன் முறையாக நிரப்பப்பட்ட K -35A விண்ணப்பம்
- கடவுச்சீட்டு நகல் (கட்டாயமானது)
- அசல் பிறப்புசான்றிதழ் (கட்டாயமானது)
- அசல் தேசிய அடையாள அட்டை அல்லது ஓட்டுநர் உரிமம் (கட்டாயமானது)
- பொலிஸ்புகார் அறிக்கை (கிடைத்தால்)
- காலாவதியான இத்தாலியில் தங்கியிருப்பதற்கான அனுமதி (இருப்பின்)
- முறையாக நிரப்பப்பட்ட புகார் படிவம்
- முறையாக நிரப்பப்பட்ட டி படிவம்
- பிரமாணபத்திரம் (விண்ணப்பதாரர் ஒரு இலங்கை குடிமகன் என்றும், இத்தாலிக்கு எவ்வாறு வந்தர் என்பது பற்றியும் மற்றும் கடவுச்சீட்டு இழப்பு போன்ற தகவல்களை குறிப்பிட வேண்டும்)
- கூரியர் படிவம் (தேவைப்பட்டால்)

**குறிப்பு**: விண்ணப்பம் மற்றும் பிற ஆவணங்கள் யாவும் இரண்டு தொகுதிகளில் சமர்ப்பிக்க வேண்டும் **(TWO SETS)**

வசூலிக்கப்படும் கட்டணம்: யூரோ 330.00
கூரியர் கட்டணம் யூரோ 12.00 (தேவைப்பட்டால் )

**வகை 03: அசல் கடவுச்சீட்டு அல்லது கடவுச்சீட்டு நகல் இல்லாத விண்ணப்பதாரர்கள்**

- 4 புகைப்படங்களுடன் முறையாக நிரப்பப்பட்ட K -35A விண்ணப்பம்
- அசல் பிறப்பு சான்றிதழ் (கட்டாயமானது )
- அசல் தேசிய அடையாள அட்டை (கட்டாயமானது)
- பொலிஸ் புகார் அறிக்கை (கிடைத்தால்)
- காலாவதியான இத்தாலியில் தங்கியிருப்பதற்கான அனுமதி (இருப்பின்)
- முறையாக நிரப்பப்பட்ட புகார் படிவம்
- முறையாக நிரப்பப்பட்ட டி வடிவம்
- பிரமாண பத்திரம் (விண்ணப்பதாரர் ஒரு இலங்கை குடிமகன் என்றும், இத்தாலிக்கு எவ்வாறு வந்தா என்பது பற்றியும் மற்றும் கடவுச்சீட்டு இழப்பு போன்ற தகவல்களை குறிப்பிட வேண்டும்)
- கூரியர் படிவம் (தேவைப்பட்டால்)

**குறிப்பு**: விண்ணப்பம் மற்றும் பிற ஆவணங்கள் யாவும் இரண்டு தொகுதிகளில் சமர்ப்பிக்க வேண்டும் **(TWO SETS)**

வசூலிக்கப்படும் கட்டணம்: யூரோ 420.00
கூரியர் கட்டணம் யூரோ 12.00 (தேவைப்பட்டால்)

விண்ணப்ப செயல்முறை குறித்து மேலும் விபரம் அல்லது விளக்கம் தேவைப்படுமாயின் விண்ணப்பதாரர் பின்வரும் தொலைபேசி அல்லது மின்னஞ்சல் வழியே தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்

**தூதரகபொதுதொலைபேசிஎண் : 06 8840801, 3209404217, 3483027997**
**மின்னஞ்சல் : consular.rome@mfa.gov.lk**

**பின்பற்ற வேண்டிய சுகாதார நெறிமுறைகள்:**

தற்போதைய COVID 19 தொற்று நோய் சூழலில் பொதுமக்களிடையே வைரஸ் பரவலை கட்டுப்படுத்த சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக, இத்தாலிய சுகாதார அதிகாரிகளால் விதிக்கப்பட்டுள்ள அனைத்து தேவைப்பாடுகள் மற்றும் சுகாதார நெறி முறைகளை தூதரகத்திற்கு வருகை தரும் அனைவரும், கட்டாயமாக பின்பற்ற வேண்டும், சனநெரிசலைக் குறைக்கும் அதே வேளையில் இலங்கை சமூகத்திற்கு அதிகபட்ச சேவையை வழங்குவது மற்றும் மிகவும் பயனுள்ள முறையில், பொதுமக்களின் அதிகபட்ச பாதுகாப்பின் நோக்கமாக கொண்டு **இச்சுகாதார நெறிமுறைகள்** நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

- கையுறைகள் மற்றும் முககவசம் அணிதல் வேண்டும்
- ஒரு மீட்டர் சமூக இடைவெளி தூரத்தை பராமரிக்கவும்
- நுழைவாயிலில் கைகளே நன்ருக சவர்காரமிட்டு கழுவு வேண்டும்
- வருகை தரும் அனேவாரினதும் உடல்வெப்பநிலே நுழைவாயிலில் பரிசோதிக்கப்டும்

ஒவ்வொரு விண்ணப்பதாரரின் பெயரிலும் **நேர ஒதுக்கீடு** முன்பதிவு செய்யப்பட வேண்டும். **நேர ஒதுக்கீடு** சந்திப்பு உறுதிப்படுத்தலானது கவுண்டரில் சரிபார்க்கப்படும். ஒரே நபருக்கு பல சந்திப்பு**க்**கள் கோரப்படுவதனை தயவு செய்து தவிர்த்துக்கொள்ளவும்.

அனைத்து விண்ணப்பதாரர்களும் பூர்த்தி செய்ய வேண்டிய "**SANATORIA 2020" அத்தியாவசிய படிவத்தை"** பூர்த்தி செய்து' (Online)ஆன்லைன் வழியே தூதரகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

முன் பதிவு நேர ஒதுக்கீட்டை பெறுவதற்கான இணையவழி தொடர்பு (Prior Appointment)
Link: https://smartscheduling.com/slembrome

**26.05.2020**